# தவறான
# மருந்துப் பாவனை
# தற்கொலைக்குச் சமம்.....



## அளவுக்கு மிஞ்சினால்
## அமுதமும் நஞ்சு.

# மருந்துகளின் தவறான பாவனை

**வைத்திய ஆலோசனை இன்றி தாம் விரும்பியவாறு மருந்துகளைப் பாவித்தல்.**

**மருந்துகளை சரியான அளவுகளில் பாவிக்காமை (Dosage):**

மருந்துகளின் சரியான அளவுகள் பக்க விளைவுகளை குறைவாக ஏற்படுத்தக்கூடிய அதேநேரம் குறித்த நோயைக் குணமாக்க போதியதாகவும் இருக்க வேண்டும். அத்தோடு வயது, நோயின் தீவிரம் என்பதைப் பொறுத்து வைத்தியர்களினால் தீர்மானிக்கப்படுகிறது.

**மருந்துகளை குறித்த நேர இடைவெளியில், குறித்த காலத்தினுள் எடுத்து முடிக்காமை:**

இதனால் நோய் குணமடைவது தாமதப் படுவதோடு, மருந்துகளுக்கு எதிர்ப்பு சக்தியை கொண்ட நோய்க் காரணிகளின் உருவாக்கத்திற்கும் காரணமாகின்றது.

**காலாவதியான மருந்துகளை பாவித்தல்:**

இதனால் மருந்துகளின் நோயைக் குணமாக்கும் இயல்பு அற்றுப் போவதோடு அவை உடலுக்குத் தீங்கான விளைவுகளையும் உருவாக்கலாம்.

**வயது வந்தவர்களுக்கும் (Adults), சிறுவர்களுக்கும் (Children) மருந்துகளை ஒரே அளவில் கொடுத்தல்:**

சிறுவர்களுக்கு, வயது வந்தவர்களுக்கு பாவிக்கும் அதே அளவு மருந்தை கொடுக்கும் போது அது அவர்களில் கூடிய நச்சுத் தன்மை உடையதாக மாறலாம் இதனால் சிறுவர்களில் இறப்பு நிகழ வாய்ப்புண்டு.

# மருந்துகளின் தவறான பாவனைக்கான காரணங்கள்

தனியார் மருந்துக் கடைகளில் தமது நோயின் அறிகுறிகளைத் தெரிவித்து அதற்கு மருந்து-களைப் பெற்றுக் கொள்ளுதல்

முன்பு ஒரு தடவை ஏற்பட்ட நோய்க்கு பாவித்த மருந்தை சேமித்து வைத்து மீண்டும் அதே அறிகுறிகளுடன் வரும் வேறோர் நோய்க்குப் பாவித்தல்.

சட்ட ரீதியாக வைத்திய சான்றிதழ்கள் இல்லாத (Malpractitioners) நபர்களிடம் சென்று தமக்குரிய நோய்க்கு மருந்துகளைப் பெற்றுக் கொள்ளுதல்.

வைத்தியசாலைகளில் கடமையாற்றும் வைத்தியர் அல்லாதோர் தாம் வைத்திய சாலைகளில் பெற்ற மருந்துகள் மற்றும், நோய்கள் பற்றிய அனுபவத்தைக் கொண்டு தமக்கும், மற்றவர்களுக்கும் மருந்துகளை சிபார்சு செய்தல்.

# தவறான மருந்துப் பாவனையினால் ஏற்படும் விளைவுகள்.

மருந்துளை அதிகளவில் உள்ளெடுக்கும் போது (Over Dosage) அவை உடலிற்கு நஞ்சாக மாறி இறப்பை ஏற்படுத்தலாம்

நுண்ணுயிர்க் கொல்லிகளை (Antibiotics) பிழையான அளவிலும், பிழையான முறையிலும் பாவிக்கும் போது அவற்றை எதிர்த்து வளரக் கூடிய நுண்ணுயிர்கள் (Resistant Organism) உருவாக்கப்படுவதால், குறித்த கிருமியினால் ஏற்படும்நோய்களுக்கு அம் மருந்துகளை பாவிப்பது பயனற்றுப் போதல்.

வைத்திய ஆலோசனைகள் இன்றி சில மருந்துகளை தொடர்ச்சியாக குறித்த நாட்களுக்குள் போடாவிட்டால் அந்நோய் மீண்டும் வர வாய்ப்புக்கள் உருவாதல்.

பெரும்பாலான மருந்துகளை அதிகஅளவில் எடுக்கும் போது வாந்தி, தலைச்சுற்று, வயிற்றுநோ, வயிற்றுளைவு, தலையிடி என்பன ஏற்படலாம்.

சில மருந்துகள் சில நோயாளிகளுக்கு ஒவ்வாமை இயல்பை (Allergic reaction) வெளிக்காட்டுதல்

சில மருந்துகளை கர்ப்பிணித் தாய்மார் பாவிக்க முடியாது. ஏனெனில் அவை கருவில் உள்ள குழந்தையின் வளர்ச்சியை பாதிக்கக்கூடியவை.

## எமது பகுதியில் கூடுதலாக பாவனையில் உள்ள சில மருந்துகளும், அவற்றின் பக்க விளைவுகளும்

| மருந்தின் பெயர் | பக்க விளைவுகள் (Side Effects) |
| --- | --- |
| அமோக்சசிலின் (Amoxycillin) | வாந்தி, வயிற்றுளைவு, குருதிச் சோகை, மூளையில் கோளாறுகள் ஏற்படல். |
| சிப்றோபுளோக்சசின் (Ciprofloxacine) | வயிற்றுளைவு, வயிற்றுநோ, தலைச்சுற்று, பார்வைக் கோளாறு, மஞ்சட்காமாலை, உடல் வீக்கம், சிறுநீரகக் கோளாறு. |
| குளோரோகுயின் (Chloroquine) | உணவுக் கால்வாய் தொகுதியில் கோளாறு, தலைமயிர் உதிர்தல், மிக அதிகளவில் மருந்தின் அளவு குருதியில் கூடும் (Over Dosage) இருதய நோய் மூளையில் கோளாறு. |
| பனடோல் (Panadol) | குருதிக் கோளாறுகள், சிறுநீரக நோய், ஈரல் பழுதடைதல் இதனால் இறப்பும் ஏற்படலாம் (Very High Dosage) |
| அஸ்பிறின் (Aspirin) | அதிகளவில் பாவிக்கும் போது (Over Dosage) செவிட்டுத் தன்மை, வியர்த்தல், கோமா குடற் புண்கள். |
| பிறிற்றன் (Pritone) | உடற்சோர்வு, தலையிடி, வாய் காய்தல், (Dry Mouth) பார்வைக் கோளாறு. |
| பிறிட்ணிசோலோன் (Prednisolone)) | இரப்பைப்புண்(Pepticulcer) என்பு முறிவு, உடல் பருத்தல், சலரோகம் ஏற்படலாம். |

வெளியீடு:
சுகாதார கல்விசார் பொருட்கள் தயாரிப்பு அலகு,
சமுதாய மருத்துவத்துறை,
மருத்துவ பீடம்,
யாழ் பல்கலைக்கழகம்.
மார்ச், 2002.

16

அனுசரணையாளர்கள்:

**சன்றைஸ்**

உயர்ந்தரக
அயோடின் கலந்த உப்பு

இந்தியாவிலிருந்து நேரடியாக இறக்குமதி
செய்யப்பெற்று,
தரம், நிறை, சுவை குன்றாது
இலகுவான பைக்கற்றில்
அடைக்கப்பெற்று விற்பனையாகின்றது.

விநியோகஸ்த்தர்கள்:

**அம்பிகை களஞ்சியம்**

304 (110) ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி:
021 2511

**எஸ்.வீ.முருகேசு**

154, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

நந்தா கிரபிக்ஸ் (NG)
96, கச்சேரி நல்லூர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.